Registered as a Newspaper

பக்கங்கள் 04

விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

மக்கள் தினசரி

Peoples Daily

Nallur Branch Library

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 08 | ( 23-12-93 ) | வியாழக்கிழமை | ஓசை 308

## புதிய வகைக் காய்ச்சலினால் பெருமளவு மக்கள் பாதிப்பு

குடாநாட்டில் காய்ச்சல் நோய்க்கு கடந்த சில நாட்களில் பெருந்தொகையானோர் இலக்காகியுள்ளனர். யாழ். போதனா மருத்துவமனையில் நேற்று முன்தினம் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட 240பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை வெளி நோயாளர் பிரிவிலும் பலர் சிகிச்சை பெற்றுள்ளனர். இதேவேளை காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட மேலும் 90 பேர் நேற்று பகல் 11 மணிக்கிடையில் யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாளாந்தம் இந்த புதிய வகைக் காய்ச்சல் நோய்க்கிலக்காவோரது தொகை அதிகரித்து காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## மக்கள் மாவுக்கு அலைச்சல் சங்கம் தனியாருக்கு விற்பனை

(நமது நிருபர்)

குடாநாட்டில் மாவுக்கு மக்கள் அலைந்து திரிந்து தனியார் கடைகளில் கூடுதல் விலை கொடுத்து வாங்கும் இவ்வேளையில் மக்களுக்கு சேவை செய்ய என அமைக்கப்பட்டயாழ்ப்பாணப் பகுதியில் இயங்கிவரும் ஒரு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது தம்மிடமிருந்த 70 மூடை மாவை சில்லறை விலையில் தனியார் வியாபாரிகளுக்கு விற்பனை செய்துள்ளமையை பொது நிர்வாகத் தொடர்பகம் கண்டுபிடித்துள்ளது.

இச்செயல் தொடர்பாக தற்பொழுது மேற்படி சங்கம் மீதான விசாரணைகளை பொது நிர்வாகத் தொடர்பகம் மேற்கொண்டு வருகிறது.

## எறிகணைவீச்சு

(தொல்புரம்)

வலிமேற்குப் பகுதிகளை நோக்கி சிறிலங்கா இராணுவ நிலைகளிலிருந்து ஆட்லறி எறிகணைகள் ஏவப்பட்டன.

நேற்று முன்தினம் இரவு 10. 50மணியளவில் பலாலி, காங்கேசன்துறை இராணுவ நிலைகளிலிருந்து ஏவப்பட்ட ஆட்லறி எறிகணைகள் அளவெட்டி, விளான், பண்டத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண நிறுத்தத்தை கண்டித்து கட்டடத் தொழிலாளர் ஊர்வலம்

(தென்மராட்சி)

சீமெந்து கட்டடத் தொழிலாளருக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணத்தை நிறுத்தியதை அடுத்து தென்மராட்சிப் பகுதி சீமெந்துக் கட்டடத்தொழிலாளர்கள் நேற்று காலை 10. 45 மணியளவில் மீசாலைச் சந்தியில் இருந்து சாவகச்சேரி உதவி அரசாங்க பணிமனை வரை மௌன ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

மேற்படி ஊர்வலம் மீசாலைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக 11. 15 மணியளவில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையை வந்தடைந்தது. இவ் ஊர்வலத்தில் நூற்றுக்கணக்கான கட்டடத் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். ஊர்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## மீனவரைநோக்கி துப்பாக்கி பிரயோகம்

(தொல்புரம்)

சிறிலங்கா அரசின் கடற்படைக்கு சொந்தமான விசைப் படகுகளில் ரோந்து வந்த கடற்படையினர் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12.40 மணியளவில் சுழிபுரம், திருவடிநிலைக்கடற்பரப்பில் ரோந்துசுற்றி வந்த கடற்படையினர்தமது விசைப்

(3 ஆம் பக்கம் பார்க்க)

# தென்மாகாணத்தில் பதற்றம்; காலியில் பொலிஸ்படை குவிப்பு!

## தென்மாகாணத்திற்கு புதிய ஆளுநர்

(கொழும்பு)

தென்மாகாணத்தின் ஆளுநராக டாக்டர் என்.எம். ஜெயரெட்ணா நேற்றுப் பதவி ஏற்றார்.

ஓய்வு பெற்ற நீதிபதியான ஜெயரெட்ணாவை ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க இந்தப் பதவியில் நியமித்துள்ளார்.

## கிழக்கு மாகாணத்தில் தேர்தல் குறித்து அறிவிப்பு

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும், வவுனியா நகர சபைகளுக்குமான தேர்தல் மனுபத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 11 பிரதேச சபை, அம்பாறை மாவட்டத்தின் 15 பிரதேச சபைகள், வவுனியா, திருமலை மாவட்டத்தின் அனைத்து பிரதேச சபைகளுக்குமான உள்ளூராட்சித் தேர்தல்களே அடுத்த வருட முற்பகுதியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உள்ளூராட்சி மன்ற தேர்தல்களில் கலந்துகொள்ளவிருக்கும் கட்சிகள், சுயேட்சைக்குழுக்கள் ஜனவரி 5ஆம் திகதிமுதல், 12ஆம் திகதி வரை தமது நியமனப் பத்தி

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. தே. க – எதிரணியினர் மோதலாம்

(கொழும்பு)

தென்மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அதிகாரப் போட்டியைத் தொடர்ந்து அங்கு நெருக்கடி நிலை உருவாகியிருப்பதாகவும், அதைத் தொடர்ந்து அங்கு கலவரங்கள் வெடிக்கலாம் எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, அப்பகுதிக்கு 1000 பொலிஸார் மேலதிகமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் ஒருபகுதிப் பொலிஸார் இன்று அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

தென்மாகாண சபையை கைப்பற்றுவதற்கு அரசாங்க கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் பலத்த போட்டியில் ஈடு

தற்பொழுது எதிர்க்கட்சியின் கையிலுள்ள மாகாணசபை அதிகாரத்தை இன்று நடைபெறவுள்ள வரவு - செலவு

கடிப்பதன் மூலம், கைப்பற்ற ஐ.தே.கட்சி திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

## ‘சுதந்திரப் பறவைகள்’ நாளை வெளிவருகிறது

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடான சுதந்திரப் பறவைகள் மார்கழி மாத இதழ் நாளை வெளிவருகிறது.

பூநகரி மீதான ஈரூடகத் தாக்குதலில்மகளிர்படையணி என்ற தலைப்புச் செய்தியுடன் வெளிவரவுள்ள இவ் இதழில் திருமணம் யாழ்ப்பாண சமூகத்தில் ஒரு பார்வை, சென்று வா மகளே வென்று வா, போராளிகளின் பேனாக்கள் பேசுகின்றன, பட்டைதீட்டப்பட்ட வைரங்கள், அவளுக்கு சொந்தமாக ஒரு நிலம் போன்ற அம்சங்களுடன் சிறுகதை, மற்றும் கவிதைகளும் இடம்பெற்றுள்ளன.

## ஐ. தே. கவை ஆதரிப்பதாக

## அங்கிலிக்கன் ஆயர்

திருமலை மாவட்டத்தின் அனைத்து பிரதேச சபைக வரை தமது நியமனப் பத்தி

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## ஐ. தே. கவை ஆதரிப்பதாக செல்லச்சாமி அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் எஸ். தொண்டமான் மத்தியமாகாண சபையில் ஆளும் கட்சிக்கு எதிராக வாக்களிப்பதென அறிவித்திருப்பதைத் தொடர்ந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டுள்ளது.

தானும் தன்னைச் சேர்ந்தவர்களும் ஐ.தே கட்சிக்கும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவுக்கும் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கப் போவதாகவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரானஎம்.எஸ். செல்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

முதலைக்குடா ஆற்றில்

## மீன்பிடிக்கச் சென்றவர் படையினரால்சுட்டு கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு முதலைக்குடா ஆற்றில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்டதுடன் மற்றவர் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டுசெல்லப்பட்டார்

கடந்த 19ஆம் திகதி அதிகாலை 5.20 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டம் முனைக்காடு முதலைக்குடா ஆற்றில் யோகன் (வயது32) மற்றும் வைரமுத்துநாதன் (வயது23) ஆகிய இருவரும் சென்றுகொண்டிருந்த போது இவர்கள் இருவரையும் சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ தேசத்துரோகிகளும் இணைந்து கைது செய்தபின் முதலைக்குடாவைச் சேர்ந்த யோகன் (வயது 32) என்பவரை சுட்டுக் கொன்றபின் வைரமுத்து நாதனை தமது முகாமுக்கு கொண்டு சென்றுள்ளனர்.

வருகின்றது.

தென்மாகாண சபையை கைப்பற்றுவதற்கு அரசாங்க கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் பலத்த போட்டியில் ஈடுபட்டுள்ளமை தெரிந்ததே. தற்பொழுது எதிர்க்கட்சியின் கையிலுள்ள மாகாணசபை அதிகாரத்தை இன்று நடைபெறவுள்ள வரவு - செலவு திட்ட வாக்கெடுப்பில் தோற்கடிப்பதன் மூலம், கைப்பற்ற ஐ.தே.கட்சி திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. இதன் ஒரு கட்டமாக ஆளும்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## காலி நகர விடுதிகளில் அமைச்சர் தலைமையில் குண்டர்கள்

### கலவரம் வெடிக்கலாம் என அச்சம்

தென்மாகாணத்தில், காலிப் பகுதியில் உள்ள விடுதிகளில் ஐ.தே.கட்சி அமைச்சர்களும், காடையர் கும்பலும் முகாமிட்டுள்ளமை தமக்கு தெரியவந்துள்ளதாக தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

மேலும் அவர், இன்று நடைபெறவிருக்கும் வரவு-செலவுத் திட்டம் வாக்செடுப்பின்போது பொதுமக்கள் கலரி மூடப்பட்டிருக்கும் என்றும், மாகாணசபைக் கூட்டம் நடைபெறும் வளவிற்குள் எவரையும் ஆயுதங்களுடன் அனுமதிக்கக்கூடாது என தான் பொலிசாருக்கு பணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தென்மாகாண வரவு - செலவுத்திட்டம் ஒரு வாக்கினால் நிராகரிக்கப்படும்?

(கொழும்பு)

தென்மாகாண சபையில் நாளை இடம்பெற விருக்கும் வரவு - செலவுத்திட்ட வாக்கெடுப்பில் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படப் போவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது என செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக தென்மாகாண ஆளும் கட்சி உறுப்பினர் ஒருவர்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## அங்கிலிக்கன் ஆயர் யாழ்ப்பாணம் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

அங்கிலிக்கன் திருச்சபையின்கொழும்புமறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கென்னத் பெர்ணான்டோ அடுத்தமாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

அண்மையில் கொழும்பு சென்று திரும்பிய கோப்பாய் பரிசுத்த மரியாள் தேவாலய சபை குரு கலாநிதி ஹென்றி விக்ரர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி யாழ்ப்பாணம் வரும் இவர்14ஆம்திகதிவரை இங்கு தங்கியிருப்பார். திருச்சபை விவகாரங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் வரும் இவர் இங்கு சிறிலங்கா வான்படை புரிந்த அனர்த்தங்களையும் பார்வையிடவுள்ளார்.

## ஹமில்டன் வணசிங்காவின் சொத்து விபரம் வெளியிடுக

### பாராளுமன்றம் கோரிக்கை

சிறிலங்காவில் பாதுகாப்பு படையின் இரு உயர் அதிகாரிகளின் சொத்துக்கள் விபரங்களை சமர்ப்பிக்குமாறு சிறிலங்கா பாராளுமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது-

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்கா மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலைய, விமான பயண சேவைகள் தலைவர் அட்மிரல் ஹிக்கடுவகே ஆனந்த சில்வா ஆகியோரின் சொத்துகள் தொடர்பாக கருத்துக்களை இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வர்த்தமானி மூலமும், பத்திரிகை மூலமும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது-

## கதிரவெளியில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மட்டக்களப்பு கதிரவெளி முகாமிலிருந்து காவல்புரியவந்த இராணுவத்தினருடனான மோதலின் போது பெருமளவு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். முகாமிலிருந்து 500 யார் தூரத்தில் வைத்து இத்தாக்குதல் நடாத்தப்படடது. இத்தாக்குதலில் 4 இராணுவத்தினர் பலியாகினர். மேலும் முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீது புலிகளின் மற்றொரு அணி தாக்குதல் நடாத்தியது. இதில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை.

இத்தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு;

| | |
|---|---|
| ஃ ஏ கே. எல். எம். ஜி. | 01 |
| ஃ இதன் ரம் மகசின் | 01 |
| ஃ லிங்குடன் ரவை | 141 |
| ஃ ரி 56-1 ரக துப்பாக்கிகள் | 03 |
| ஃ இதன் ரவைக் கூடுகள் | 12 |
| ஃ தொடர்பு சாதனம் | 01 |
| ஃ ஏ. கே. கோல்சர் | 03 |
| ஃ சப்ளை கோல்சர் | 02 |
| ஃ நடுத்தர ரவைகள் | 365 |
| ஃ கோல்சர் | 01 |
| ஃ ஜே ஆர். ரக கைக் குண்டு | 05 |
| ஃ சப்பாத்து (சோடி) | 03 |
| ஃ றெயின் கோட் | 05 |
| ஃ தண்ணீர் கான் | 04 |
| ஃ கெல்மெற் | 03 |

### வீரச்சாவு



லெப். றவிலோகன்

நேற்று முன்தினம் மட்டக்களப்பு கதிரவெளிமுகாம்பகுதியில் காவல்காக்கவந்த சிறி

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## அரசசார்பற்ற நிறுவனங்கள் மீது சிறிலங்கா அரசு கட்டுப்பாடு

(கொழும்பு)

அரசசார்பற்ற நிறுவனங்கள்மீது சிறிலங்கா ஜனாதிபதி அவசரகால விதிமுறைகள்ளை நேற்றுக்காலை பிரகடனப்படுத்தியுள்ளார்.

அரசசார்பற்ற நிறுவனங்கள் பதிவுசெய்யப்படுவதோடு அவற்றின் விதிகள் அவதானிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. வருடமொன்றிற்கு 50ஆயிரம் ரூபாவிற்கும் அதிகமான பணம், பொருள்கள் அல்லது தேவைகளைப் பெறும் அரசசார்பற்ற நிறுவனங்கள் தம்மைப் பதிவு செய்துகொள்ளவேண்டும்.

அத்துடன் இவை வருடம் ஒன்றிற்கு ஒரு லட்ச ரூபாவிற்கும் கூடுதலான பணம் பொருள் அல்லது தேவைகளைப்பெற்றுக்கொண்டால் அதன் விதிகள் கட்டாயம் அவதானிப்பிற்குஉள்ளாகும்.

இந்த நிறுவனங்களைப் பதிவு செய்வதுஅவதானிப்பதுஎன்பவற்றுக்கு சமூகசேவைகள் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார். இந்த நிறுவனங்கள் அந்த வருடத்தில் பெற்றுக் கொண்டபணம் பொருள் ஆகியவை குறித்தும்அவற்றை பெற்ற விதம் பகிர்ந்தளிப்பு முறை என்பனபற்றி பதிவேடுகள் பேணப்படவேண்டும்.

## வரி விளம்பரம்

### இறைச்சிக் கோழி

புறொய்லர் இறைச்சிக் கோழி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு தேவி நகை மாளிகை பிரதான வீதி பருத்தித்துறை (6977)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையிலுள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும், விற்கப்படும் சகல கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வாசலில் அருகில்) கிளை. கண்டி வீதி, சாவகச்சேரி. (8129)

### 'அகிலன்ஸ்'


சகலவிதமான வாகனங்களின் இலக்கத் தகடுகளும் அழகிய முறையில் எழுதிக் கொடுப்பவர் (மஞ்சள் × கறுப்பு) எழுத்தோவியர் ''அகிலன்ஸ்'' 426, கண்டிவீதி- அரியாலை (6992)

### உணவு சேவை

புரியாணி, நூடில்ஸ்வகை, சூப்வகை, (f) பிறைட்றைஸ், சிக்கன் 65, ரோல்ஸ், கட்லட், etc. etc. etc. -பரிமாறுசேவை உடன் நாடவும், காருண்யா சைனீஸ் ஹொட்டேல் இல. 166, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (6957)


# நினைவஞ்சலி


6ஆம் ஆண்டு



மேஜர் முரளி
**வேலுப்பிள்ளை இரத்தினசிங்கம்**
முன்னை நாள் யாழ் மாவட்ட
மாணவரமைப்பு பொறுப்பாளர்

அன்னை மடியில்: 06 10.58
அந்நியர் படையுடன் சமரில்
வீரச்சாவு 23 12 87

8ஆம் ஆண்டு



வீரவேங்கை தம்பி
**வேலுப்பிள்ளை இராஜகோபால்**

அன்னை மடியில்: 12 06.62
கடல் சமரில்
வீரச்சாவு 15.04.85

நீவிர் விட்ட தளத்தில் உம்மவர் வெற்றிகள் படிக்கற்களாக உயர்ந்து தமிழீழக் கதவை தட்டுகின்றது. அது திறக்கும் போது உங்கள் கனவு நனவாகும்.

ஆவரங்கால். (சி-6985) குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலிகள்

அண்மையில் இயற்கையெய்திய இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளைப் பாதுகாப்பு ஊழியர்

**அமரர் தங்கராசா ஜெயக்குமார்**

அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை காணிக்கையாக்குகின்றோம் அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்கட்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முகாமையாளரும்
ஊழியர்களும்
இலங்கை வங்கி,
சுன்னாகம்.

(6967)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 23 — 10 — 74



ஆண்டவன் அடியில்: 03 — 01 — 93

**செல்வன் அ. சிவகுமார் (ராசன்)**
(சரவணை மேற்கு, வேலணை)
திதி: 23-12-93

ஓராண்டு மறைந்தாலும் உன்னுடைய அன்பு முகம் மறையவில்லை. எங்கள் ராசனே எப்போது எனி உன்னைக் காண்போம். என்றும் உன் நினைவாக உருகுகிறோம்.

உன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்

ஆனந்தம் வடலி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

உன் அம்மா,
சகோதர, சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

(6975)

# நினைவு கூருகின்றோம்...

## 1993-12-23

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மட்டு குருமண்வெளிப்பகுதில் சிறிலங்கா அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**2-ம் லெப். கோபு** (கதிர்காமத்தம்பி சபாரத்தினம் -கல்லடி-மட்டு)

**2-ம் லெப். கிருஷ்ணா** (-- தேவசகாயம் - பாலையடிவெட்டை-மட்டு)

1987ஆம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய,

**சதா** (செல்வராணி சிதம்பரப்பிள்ளை - 3-ம் வட்டாரம், முள்ளியவளை-முல்லைத்தீவு)

**லெப். தர்சினி** (ரஞ்சினிதேவி சிவசுப்பிரமணியம் சேமமடு ஓமந்தை-வவுனியா)

**மேஜர் முரளி** (வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம்- சர்வோதயவீதி-ஆவரங்கால்)

**கப்டன் காந்தி** (கனகரத்தினம் செல்வகுமார்- கொழும்புத்துறை-யாழ்)

**பஞ்சன்** (கணபதிப்பிள்ளை பஞ்சாட்சரலிங்கம்-நீர்வேலி வடக்கு-யாழ்)

**நிதி** (சிவமனோகரி இராசலிங்கம் இடைக்காடு, அச்சுவேலி-யாழ்)

**அமுதன்** (செல்வராசா அமுதன்-நல்லூர் வடக்கு யாழ்)

**நிகிந்தா** (பிறேமலதா பாலசுந்தரம்-கண்டிவீதி, சாவகச்சேரி-யாழ்)

**நிர்மலா** (டொறின் அஜந்தி அன்ட்றூ-தேவாலய வீதி, சுண்டுக்குளி-யாழ்)

**நிரா** (விநாயகமூர்த்தி நிராகரன்-கோப்பாய்வடக்கு- யாழ்)

1988ஆம் ஆண்டு காங்கேசன்துறையில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப் பின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் அன்பு** (பத்திநாதன் அமலராஜன் - சவரியோடை, மயிலிட்டி-யாழ்)

பரந்தன் 40 அடிப்பாலத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**உங்கு-சுதா** (காசிநாதன் ஜெகநாதன்-கோரன்கட்டு கிளிநொச்சி)

காரைநகரில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் இன்சூர்** (குணநாதர் குணநாதன்-சிவன் கோயிலடி, வட்டுக்கோட்டை- யாழ்)

தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தயா** (அருச்சுனன் ஜெயதாசன்-மானிப்பாய்-யாழ்)

கிளிநொச்சியில் தேசவிரோதிகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட, முறிப்பு வீதி இ. போ. ச. உணவுச் சாலை உரிமையாளரான யாழ் - சங்கானை வாசியான தமிழ்ப் பொதுமகன்.

இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகள் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் சடலமாக மீட்கப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**குருகுலசிங்கம்** (சங்குவேலி வடக்கு - மானிப்பாய்)


1989ஆம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**தீபன்** (— — அம்பாறை)

மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**தாமு-அண்ணாச்சி** (சின்னத்தம்பி ரணசிங்கம்-

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



மகாஜனாவிற்கு
ஈடுசெய்ய முடியா இழப்பு

உதிரத்தின்
செந்நிறத்தால்

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## கப்டன் ஈழமாறன் (தினேஷ்)

**சுப்பிரமணியம் இந்திரகுமார் ( வவி )**

பிறப்பு:
**05 - 05 - 1973**

வீரச்சாவு:
**11 - 11 - 1993**

25 12-1993 சனி அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 45-வது நாள் நினைவஞ்சலி நிகழ் விலுப மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு போராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்,
சாவகச்சேரி (தற்காலிக முகவரி)

சுப்பிரமணியம் குடும்பத்தினர்,
பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க மின்தறி தொழில்
நுட்பவியலாளர் மாதகல்.

(6994)

## மகாஜனாவிற்கு ஈடுசெய்ய முடியா இழப்பு

செல்வன் சு. இந்திரகுமார் 1984ஆம் ஆண்டு எமது பாடசாலையில் ஆண்டு 6 இல் சேர்ந்து 1989 மார்கழி மாதம் க. பொ. த. சாதாரண பரீட்சை எடுத்து மிகத்திறமையாக சித்தி எய்தியவர். ஒரு விசேட சித்தியும் நான்கு திறமைச் சித்திகளும் பெற்று க. பொ. த. உயர்தர வகுப்பில் படிப்பதற்குத் தகுதியிருந்தும் தமிழ் மக்களின் விடிவிற்காக இயக்கத்தில் சேர்ந்து பல களங்களில் தன் திறமையைக் காண்பித்து ஈற்றில் பூநகரிப் போரில் 11-11-93இல் வீர மரணம் அடைந்தார். இவரின் இழப்பு மகாஜனாவுக்கு ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். நற்பண்பும் நற்குணமும் நிறைந்த இந்திரகுமார் ஏனைய மாணவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைகின்றார் கல்வி கற்கும் காலத்தில் கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் சிறந்து விளங்கிக் கல்லூரிக்கு பெருமையைத் தேடித்தந்தார். ஒரு சிறந்த விளையாட்டு வீரனாகத் திகழ்ந்த இவர், பாடசாலை மட்டத்திலும் கோட்ட, மாவட்ட மட்டத்திலும் பல வெற்றிகளை ஈட்டி தனக்கும் கல்லூரிக்கும் புகழை ஈட்டிக்கொடுத்தவர். இவரின் இழப்பால் துயருற்றிருக்கும் பெற்றோர், குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

நா. நாகராசா (அதிபர்)
மகாஜனா கல்லூரி தெல்லிப்பழை

## ஈழமாறன் என்றொரு புயல் எழுந்தது

ஈழமாறன் என்றொரு
இளமை பிறந்தது
களம் பல கண்டது
காவியம் படைத்தது
பகைவனை அழித்தது
பாராட்டுகள் பல பெற்றது
நம்பி அணியின்
தலைமையை ஏற்றது
புயலெனச் சென்றது
புகு புகு வெனப் புகுந்தது
பட பட வெனச் சுட்டது
பறந்தது பூநகரி
பூனைகள் அலல புலிகள் என
புற நானூறு படைத்தது!

பழைய மாணவர்கள்
மகாஜனாக் கல்லூரி

## உதிரத்தின் செந்நிறத்தால் உருப்பெற்ற மாதகல்

அன்பின் வவியே!

நீ செய்த வீரச்செயல்களையும், உனது சாதனைகளையும் கண்டு நம் மாதகல் மண் மகிழ்ச்சி அடைகிறது உனது தியாகத்தால் எமது மண்ணும் மாவீரர் மண்ணாகிவிட்டது. இந்த மண் எங்களின் சொந்த மண் என எதிரிக்குப் புரியவைத்தாய். இளம் வயதில் புலியாகி கப்டன் ஈழமாறன் / தினேஷ் என தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடினாய். களம் பல கண்டு வெற்றிகள் பல ஈட்டினாய். இறுதியில் பூநகரியில் சரித்திரம்படைத்து மாவீரன் ஆனாய். எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு மாவீரர் இல்லத்தில் துயில் கொள்கின்றாய். எதிரிகளை வேட்டையாடி அழித்த களைப்பால் தூங்கும் உன்னை பூக்கள் சொரிந்து அர்ச்சிக்கின்றோம்.

- மாதகல் வாழ் மக்கள் -

## தமிழ் ஈழம் மலரும் ஈழமாறன் கனவு பலிக்கும்!

அடக்குமுறைக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிராகப் போராடி, இன்னலுற்றிருந்த தமிழ் சமுதாயத்தின் விடிவுக்காக வீறுகொண்டு துணிந்து விடுதலைப் புலிகளுடன் இணைந்து பல போர் முனைகளில் வெற்றிகண்டதை இன்னும்நாம் மறக்கவில்லை. ஈழமாறா, நீ மரணித்தாலும் உனது இலட்சியத்தைப் பின்பற்றி, உனது ஆயுதத்தை ஏந்தி, விடுதலைப் புலிகளுடன் நாமும் சேர்ந்து இந்த மண்ணின் விடுதலைக்காகப் போராடுவோம். இது உறுதி! இந்த மண்ணில் புலிக்கொடி பறக்கும். இது உறுதி! இந்த மண் வரலாறு படைக்கும். இது உறுதி!

பிரிவால் துயருறும் நண்பர்கள்

---

நாட்டுப் பற்றாளரான -
**குருகுலசிங்கம்** (சங்குவேலி வடக்கு - மானிப்பாய்)

1989ஆம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -
**தீபன்** (— — அம்பாறை)

மட்டு - ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-
**தாமு-அண்ணாச்சி** (சின்னத்தம்பி ரணசிங்கம் - மண்முனை வீதி, ஒல்லிக்குளம் - மட்டு)

1990ஆம் ஆண்டு மயிலம்பாவெளி, 13-ம் கிராமப்பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த-
**விஜி** (— — காரைதீவு - அம்பாறை)
**றிச்சார்ட்** (— — காரைதீவு - அம்பாறை)
**கதிர்** (காரைதீவு - அம்பாறை)
**மூர்த்தி** (இருதயபுரம் - மட்டு)

மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்காப் படையினரின் எறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**லெப். ராஜன்** (சிவஞானசுந்தரம் குகதாசன்- மஞ்சவனப்பதி, கொக்குவில் மேற்கு - யாழ்)
**2-ம் லெப். அருண்நேசன்** (வல்லிபுரம் பாலேந்திரன் - பாலைத்திடல் - சாவகச்சேரி)
**ஜெறோம்** (தர்மராசா சசிக்குமார் - மருத்துவமனை வீதி, சங்கானை - யாழ்)
**மித்திரன்** (எட்வேட் சிவநாதன் - பெனடிற்குமார் - உயரப்புலம், ஆனைக்கோட்டை - யாழ்)

அம்பாறை - 16-ம் கொலனியில் சிறிலங்கா இராணுவம் பதுங்கியிருந்து தாக்கியதில்வீரச்சாவெய்திய-
**முகிலன்** (— — வீரமுனை - அம்பாறை)

மட்டு - மண்டூர்ப் பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த-
**அரசன்** (— — ஆலையடிவேம்பு - மட்டு)

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மட்டு - கொம்மாந்துறையைச் சேர்ந்த தமிழ்மகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட சின்னஉப்போடையைச் சேர்ந்த தமிழ்மகன்.

1991ஆம் ஆண்டு வவுனியா - சமயபுரம், கோவில், பண்ணைக்குச் சென்றுகொண்டிருந்தபோது சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப். கிட்லர்-துஷ்யந்தன்** (இராசதுரை சிறி விஜயகுமார் - பாவற்குளம் - வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/8185)

## சிந்தனைக்கு

மனித சமுதாயத்தை மாற்றுவது பற்றி ஒவ்வொருவரும் பேசுகிறார்கள். தன்னைத் தானே மாற்றிக்கொள்வது பற்றி ஒருவருமே நினைப்பதில்லை-

— லியோ டால்ஸ்ட்டாய்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 23-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05

# மக்களுக்கு உதவுவது அதிகாரிகள் கடமை

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சில பகுதி மக்களுக்கு சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால், நிவாரணங்கள் உரிய நேரத்தில் கிடைக்கப் பெறவில்லை இதன் காரணமாக பாதிக்கப்பட்ட மக்கள் பெரும் இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலையும் உருவாகியுள்ளதாக அறிய முடிகிறது.

இயற்கை அழிவுகளின் போது வழங்கப்படும் உடனடி நிவாரண உதவிகள் எவ்வளவு விரைவில் மக்களைச் சென்றடைய முடியுமோ அத்தனை விரைவில் சென்றடைய ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அதிகாரிகளின் கடமையாகும். ஏனெனில், மக்கள் அப்போதைய நெருக்கடி நிலைக்கு அவை அவசியமாகின்றன. அவ்வாறு உரிய நேரத்தில் அவை கிடைக்காது விடில் அதனால் பயன் ஏதும் இல்லை என்றே கூறலாம் மேலும் அதனை உடனடி நிவாரணம் எனக் கூறுவதும் பொருத்தப்பாடானதொன்றல்ல.

இந்நிலையில், நிவாரணங்கள் தொடர்பான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படவேண்டியது அரச அதிகாரிகளின் கடமை ஆகும். அதிலும், பொருளாதார முற்றுகைக்கும், தாக்குதல்களுக்கும் அடிக்கடி உள்ளாகும் பகுதிகளிலும் உள்ள மக்கள் பொதுவாக பெரும் இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களுக்கு நிவாரண உதவிகள் விரைந்து செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

சிறிலங்கா அரசாங்கம் வழமையான புறக்கணிப்புப் போன்றே வெள்ளம் நிவாரணம் தொடர்பான விடயத்தில் உடன் அக்கறை காட்டவில்லை இம்முறை வெள்ளப் பெருக்கு வடக்கு, கிழக்கு வடமத்திய மாகாணம் என்பனவற்றில் ஏற்பட்டதாயினும், வடமாகாணம் குறித்து அரசாங்கம் எந்தவித கவனிப்பையும் இதுவரை கொள்ளவில்லை. வடக்கில் பெரும்பகுதியும் ...

### வடக்கு - கிழக்கு மாகாணங்களிற்கு

# இடமாற்றப்படும் பொலிசார் பணிக்கு சென்றே ஆகவேண்டும்

## பொலிஸ் தலைமையகம் உத்தரவு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இடமாற்றம் பெறும் பொலிசார் அப்பகுதியில் கட்டாயம் கடமையாற்றியே ஆக வேண்டும். இவ்வாறு பொலிஸ் தலைமையகம் கண்டிப்பான உத்தரவு ஒன்றை அண்மையில் பிறப்பித்துள்ளது.

உயர் அதிகாரி முதல் சாதாரண பொலிஸ் கான்ஸ்டபிள் வரை இது பொருத்தமானது எனவும், அப்பகுதிகளில் கடமையாற்ற விருப்பம் தெரிவிக்காதோர் தமது சேவையிலிருந்து விலகிக் கொள்ளல் வேண்டும் எனவும் பொலிஸ் தலைமையகம் மேலும் கூறியுள்ளது.

அத்துடன் பொலிசார் நாட்டின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றத் தயார் என்ற ஒப்பந்தத்துடனேயே சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் என்றும் பொலிஸ் தலைமையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# விசேட அதிரடிப்படைக்கு ஆட்சேர்க்க விளம்பரம்

(கொழும்பு)

சிறிலங்கா விசேட அதிரடிப் படைக்கு ஆட்சேர்ப்பதற்கான விளம்பரம் ஒன்று ரூபவாகினியில் காண்பிக்கப்படுகிறது-

விஷேட அதிரடிப்படைக்கு பெருந் தொகையில் இளைஞர்களை திரட்டுவதற்கு இராணுவ தலைமைப் பீடம் இந்த விளம்பரத்தை ஒளிபரப்பு செய்கிறது.

இராணுவத்திலிருந்து பெருந்தொகையானோர் தப்பி ஓடுவதனாலும் தாக்குதல் சம்பவங்களில் பெருமளவிலான படையினர் உயிரிழப்பதனாலும் இராணுவ தலைமைப் பீடம் புதிதாக படையினரைச் சேர்த்துக் கொள்வதற்கு முயன்று வருகிறது.

இதன் அடிப்படையிலேயே இந்த விளம்பரம் புதிதாக ஒளிபரப்புச் செய்யப்படுகிறது.

# கொழும்பில் கடத்தப்பட்ட இளைஞர் சடலமாக மீட்பு

கொழும்பு நகர்ப்பகுதியில் வைத்து காணாமல்போன யாழ்ப்பாணம் இளைஞரின் சடலம் கொழும்பு பிரதான வைத்திய சாலையிலிருந்து பெற்றோரால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும். வன்றோயன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய குமாரவேலு ஹரன் (பாபு) என்ற பொறியியலாளர் கடந்த நவம்பர் 14-ம் திகதி கொழும்பில் வைத்து காணாமல் போனார்.

கொழும்பு, காலி கடுகதிப்பு கையிரதத்தில் மோதுண்டு இறந்ததாகக் கூறப்பட்ட இவரது உடல் பெற்றோரினால் அடையாளம் காணப்பட்டது. கொழும்பு ஆமர் வீதியில் வைத்து வெள்ளை வான் ஒன்றில் வந்தவர்களால் கடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் இவரது உடல் வைத்திய சாலை சவச்சாலைக்கு வந்து சேர்ந்தது எவ்வாறு என்பது சந்தேகத்திற்கிடமாகவேயுள்ளது. மேலும் இவரது உடலில் ரயிலால் மோதப்பட்டு இறந்தமைக்கான தடயங்கள் எதுவும் காணப்படவில்லை எனப்பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளையூட் அருள்தாஸ் அருளப்பு என்ற மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்

கடத்தல் காரர்கள் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தெரிவித்து விட்டே கடத்திச் சென்றுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

# வெளிநாட்டு சேவைக்கு தெரிவுமுறையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கையில் வெளிநாட்டு சேவைக்கு ஊழியர்களை தெரிவு செய்யும் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்தது.

இதன்படி அங்கீகரிக்கப் ... துப் பரீட்சை மூலமே வெளிநாட்டு சேவைக்கு ஊழியர்கள் தெரிவுசெய்யப்படுவர். 1997ஆம் ஆண்டிலிருந்து நேரடியாக வெளிநாட்டு சேவைக்கு சேருவோருக்கும் ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்குமான வயதெல்லை 28 ஆக மட்டுப் ...

# எழுதுவினைஞர் தெரிவு மாற்றம் கொண்டுவரப்படும்

(கொழும்பு)

மாகாண எழுதுவினைஞர் சேவைக்கு ஊழியர்களை தெரிவு செய்யும் முறையில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது இதன்படி பொது எழுதுவினைஞர் சேவைக்கும் மாகாண எழுதுவினைஞர் சேவைக்கும் தனித்தனியே போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்படவுள்ளன.

இதுகால வரையில் ஒரு போட்டிப் பரீட்சையின் மூலமே இரு சேவைகளுக்கும் ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இந்தமுறை தேர்வில் ஏற்பட்ட குறைபாடுகள்பற்றி கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டதை அடுத்து பொது நிர்வாக அமைச்சர் குழு ஒன்றை நியமித்து சகல விடயங்களையும் ஆராய்வதற்கு நடவடிக்கை எடுத்தார்.

இந்தக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுக்கு அமையவே இருசேவைகளுக்கும் தனித்தனியே போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படவிருக்கின்றன.

ஒவ்வொரு ஆண்டிலும் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கென இருபரீட்சைகள் நடாத்தப்படும். இந்தப் பரீட்சைகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படும் பொழுது ஒவ்வொரு சேவையிலும் உள்ள வெற்றிடங்கள் வர்த்தமானி அறிவித்தலில் விபரமாக குறிப்பிடப்படும்.

போட்டிப் பரீட்சை மூலம் ஒருவர் தெரிவு செய்யப்படல் வேண்டுமானால் குறைந்த பட்சம் 40சதவீத புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இது அடிப்படைத் தகுதியாகக் கருதப்படும். பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்பே வெட்டுப்புள்ளி விபரங்கள் அறிவிக்கப்படும்.

தற்சமயம் நடைமுறையில் உள்ள விதிப்புரிமை முறையிலும் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. பதவியில் நியமிக்கப்படுவதற்கு பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் தகுதி பெற்றவர்களிடமிருந்து விதிப்புரிமைகள் கோரப்படும்.

# மத்திய மாகாணசபைக் கூட்டம் இரண்டுமாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபைக் கூட்டத்தொடர் டிசம்பர் மாதத்திலிருந்து இரண்டு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது. இந்த ஒத்திவைப்பு மத்தியமாகாண ஆளுநர் பி. ஜி. இம்புலானாவால் அறிவிக்கப்பட்டது.

மத்திய மாகாண சபை முதலமைச்சர்மீது எதிர்க்கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை விவாதிக்கச் சபைகூட இருந்தது. அதேசமயம் இந்தத் தீர்மான முன்மொழிவு சட்ட முரணானது என்று முன்வைக்கப்பட்ட ஒழுங்குப்பிரச்சினையை சபாநாயகர் ஏற்றுக்கொண்டிருந்தார். இந்த விவாதம் நடக்குமா, நடக்காதா என்ற குழப்ப நிலையிலேயேமாகாணசபை இரண்டு மாதகாலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் இவ்வாறு தீர்மானித்ததை ஒட்டி சபாநாயகர் மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் போவதாக எதிர்க்கட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது. அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையும் சமர்ப்பிக்கப்படாமல் போயிற்று.

அமைச்சர் எஸ். தொண்டமான் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்களித்து ஆளும் கட்சியை தோற்கடிக்கப் போவதாக ஏற்கனவே அறிவித்திருந்தது தெரிந்ததே.

மத்திய மாகாணசபை ஆட்டம் காணும் நிலையிலேயே சபைக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது,

# நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளியினதும் அவ ...

# வடக்குகிழக்கு யுத்தத்திற்கு விரைவில் தீர்வு வேண்டும்

### - பேராசிரியர் ஜான் ஜெயவர்த்தனா

(கொழும்பு)

வடக்கு, கிழக்குப் பகுதியில் நீடிக்கும் யுத்தத்திற்கு விரைவில் தீர்வு காணப்படல் வேண்டுமென, ஐ. நா. பேரவையின் முன்னாள் உதவிச் செயலாளரான பேராசிரியர் ஜான் ஜெயவர்த்தனா ... ரீதியில் இந்த யுத்தம் ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புக்கள் மிகவும் அதிகமாகும். நாட்டின் வளங்களை இந்த யுத்தம் பாதித்து வருகிறது இனமோதலின் கைதியாக இந்த நாடு மாறிப் போயுள்ளது என்றும் தெரிவித்தார்.

போன்றே வெள்ளம் நிவாரணம் தொடர்பான விடயத்தில் உடன் அக்கறை காட்டவில்லை இம்முறை வெள்ளப் பெருக்கு வடக்கு, கிழக்கு வடமத்திய மாகாணம் என்பனவற்றில் ஏற்பட்டதாயினும், வடமாகாணம் குறித்து அரசாங்கம் எந்தவித கவனிப்பையும் இதுவரை கொள்ளவில்லை. வடக்கில் பெருமழையும், வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டதாக அரசு இதுவரை அறிவிப்புக்கள் எதையும் கூடவிடவுமில்லை.

வெள்ள நிவாரணம் பற்றித்தான் பேசவில்லை என்பது ஒருபுறம் இருக்க வடக்கில் ஏற்படவிருந்த பெருமழை குறித்தோ வானிலை எதிர்வு கூறல் கூடச்செய்யவில்லை. அதாவது, தொலைக்காட்சியில் இடம்பெற்ற வானிலை எதிர்வு கூறல் அறிவிப்புக்கள் வட பகுதி பற்றிப் பொதுவாகவே புறக்கணிப்பு செய்யப்பட்டிருந்தது.

ஆனால், இதனை தரவுகள் இன்மை காரணமாக ஏற்பட்ட தவறு எனக் கூறிவிடவும் முடியாது. ஏனெனில், தற்பொழுது வானிலை எதிர்வு கூறல்களில் பெரும்பாலானவை செயற்கை கோள் தரவுகளிலும், புகைப்படங்களில் இருந்துமே செய்யப்படுகின்றன. இந்நிலையில், வடக்கிற்கென தனியான படங்கள் தேவையில்லை. கொழும்பிற்கு கிடைக்கும் செயற்கைக் கோள் படங்கள் பெரும்பாலும், இலங்கையை முழுமையாக உள்ளடக்கியவையாகவே இருக்கின்றன.

ஆனால், நிலைமை இவ்வாறு இருந்தும், வடக்கு பற்றிய வானிலை எதிர்வு கூறலை கொழும்பு வானிலை அவதான நிலையம் செய்ய முன்வரவில்லை. இதனைத் திட்டமிட்ட புறக்கணிப்பு எனக் கூறாமல் வேறு எவ்வாறு கூறமுடியும். இவ்வாறு வானிலை முன்னறிவிப்பிலேயே புறக்கணிப்பு செய்யும் சிறிலங்கா அரசு, வெள்ள நிவாரணத்திற்கு உடனடியாக நிவாரண நடவடிக்கையில் ஈடுபடும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்?

இந்நிலையில், மக்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக முழுமூச்சுடன் ஈடுபடவேண்டியது இங்குள்ள அதிகாரிகளின் பொறுப்பாகும். இதில் அதிகாரிகளுக்கு பல சிரமங்கள் இருக்கலாம். இன்று தமிழீழப் பிரதேசத்தில் பொதுமக்களுக்கு உள்ள பல இடைஞ்சல்கள் அதிகாரிகளுக்கும் உரியவைதான். இதனால், அதிகாரிகள் சிறப்பாகச் செயற்படுவதில் சிரமங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதவைதான்.

ஆயினும், அதிகாரிகள் தீவிர அக்கறை கொண்டால் பிரச்சினைகளை ஓரளவேனும் வெற்றி கொள்ள முடியும். அத்தோடு, ஓர் அதிகாரியினால் முடிவது மற்ற அதிகாரியினால் முடியாது போவது, அவரது அக்கறையீனமாகவே கருதப்படுமே ஒழிய பொதுவான நெருக்கடியே காரணம் எனக்கருத முடியாதது அதாவது, அதிகாரிகளின் விரைவான செயற்பாடே மக்களின் துயர்களைப் போக்க கூடியவையாகும் இதில் அதிகாரிகளுக்கு பொறுப்பு. கடமை என்பதுடன் மனிதாபிமானமும் அவசியமாகின்றது.

---

சேவைக்கு ஊழியர்களை தெரிவு செய்யும் முறையில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கான ஒரு பிரேரணையை அமைச்சரவை அங்கீகரித்தது.

இதன்படி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டதாரிகளும் அதற்கு சமமான தகைமையுடையவர்களும் பகிரங்க போட்டிப் பரீட்சைக்கு தோற்ற முடியும். விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்கும் 32 வயதுக்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கான அதிகபட்சவயதெல்லை 35 ஆகும் எழுத்

கள் தெரிவுசெய்யப்படுவர். 1997ஆம் ஆண்டிலிருந்து நேரடியாக வெளிநாட்டு சேவைக்கு சேருவோருக்கும் ஏற்கனவே அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்குமான வயதெல்லை 28ஆக மட்டுப் படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடத்தப்படவிருக்கும் பரீட்சைபற்றி வெளிவிவகார அமைச்சு அடுத்தவருட முற்பகுதியில் அறிவிக்கவுள்ளது.

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளியினதும் அவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட போராளிகளினதும் ஆறாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் இன்று பிற்பகல் 7.00 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் நடைபெறும் என இதனை யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

---

யில் நீடிக்கும் யுத்தத்திற்கு விரைவில் தீர்வு காணப்படல் வேண்டுமென, ஐ. நா. பேரவையின் முன்னாள் உதவிச் செயலாளரான பேராசிரியர் ஜான் ஜெயவர்த்தனா கூறியுள்ளார்.

பட்டமளிப்பு விழாவொன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், இந்த யுத்தத்திற்கு, தீர்வு காண வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் ஏற்படுத்திவிருக்கும் பாதிப்புக்களை விடவும், உயிரிழப்பு மிகவும் அதிகமாகும். நாட்டின் வளங்களை இந்த யுத்தம் பாதித்து வருகிறது இன மோதலின் கைதியாக இந்த நாடு மாறிப் போயுள்ளது என்றும் தெரிவித்தார்.

## வெளிவாரிமாணவர் வழிகாட்டல் வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப் பட்டப் படிப்பை யாழ். பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளும் மாணவர்களுக்கான வழிகாட்டல் வகுப்புகள் அடுத்த மாதம் மூன்றாம் திகதி முதல் 13ஆம் திகதிவரை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளது முதலாம், இரண்டாம், மூன்றாம் வருடகலை, வர்த்தக மாணவர்களுக்கு இவ் வழிகாட்டல் வகுப்புகள் நடைபெறவுள்ளன.

# ஜனதா தள் அஜித்பிரிவு தொடர்ந்தும் தனித்தியங்கும் - அஜித்சிங்

(டில்லி)

ஜனதா தள் அஜித் பிரிவு ஜனதா தளத்துடன் இணைந்து கொள்ள எடுத்த முயற்சிகள் தோற்றுப் போய்விட்டதாகவும், எனவே ஜனதா தள் 'ஏ' பிரிவு தொடர்ந்து தனித்து இயங்கும் எனவும் அக்கட்சியின் தலைவர் அஜித் சிங் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில், தாம் ஜனதா தளத்துடன் இணைந்து கொள்வதை ஜனதா தள்ளில் இருக்கும் எஸ். ஆர். பொம்மை குழுவினர் விரும்புவதாகத் தெரியவில்லை என்றும், அதனாலேயே தேசிய முன்னணி ஜனதா தள்ளுடன் மூன்றாவது மாற்று சக்தியை கட்டி எழுப்பும் தமது முயற்சி தோல்வியில் முடிந்தது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் சமாஜவாதி ஜனதா தளத் தலைவரும், முன்னாள் பிரதமருமான எஸ். சந்திரசேகருடன் பேச்சுவார்த்தை எதுவும் நடத்தப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அது பற்றி முடிவு எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

---

## ஐ.தே.க.

லச்சாமி அறிவித்திருக்கிறார்.

மத்திய மாகாணசபையின் கூட்டத் தொடரைப் பின் போட்டதின் பேரில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுடன்பேசி இணக்கம் காண நேரம் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெற விருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலேயே பிளவு நீங்கி ஒற்றுமையைக் கொண்டுவர யு.என்.பி. பாடுபடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## கிழக்கு

ரங்களை சமர்ப்பிக்கலாம் எனவும் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை கிழக்கில் தேர்தல் நடத்துவது தொடர்பாக சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் முடிவு எதனையும் தெரிவிக்கவில்லை.

மேலும் கிழக்கு மாகாணத்தில் தேர்தலையும் மக்கள் கருத்துக் கணிப்பையும் சுதந்திரமாக நடத்துவதற்கு ஏற்றவாறு கிழக்கிலிருந்து புலிகளை அகற்றுமாறு சிறிலங்கா அரசு பாதுகாப்புப் படைகளைக் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்தப் பகுதியில் தேர்தலை நடத்துமளவிற்குப் பாதுகாப்பு நிலைமைகள் முன்னேறியிருக்கின்றனவா என்று படைகளிடமிருந்து இன்னமும் அரசுக்குத் தகவல் வரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

## வீரச்சாவு

லங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப். றவிலோகன்/றாம்கி (செபமாலை திலீப்குமார்-செல்வநாயகம் வீதி, இருதயபுரம், மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## மீனவரை

படகுகளிலிருந்து சவுக்கடித் துறைக் கடற்பரப்பில் படுப்பு வலைத் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கலிபர் தாக்குதலை நடாத்தி உள்ளனர். இத் தாக்குதலின் போது உயிர்ச்சேதம் எதுவும் இன்றி மீனவர்கள் கரை சேர்ந்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. (41)

## எறிகணை

தரிப்பு பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. சுமார் பத்திற்கும் மேற்பட்ட எறிகணைகள் ஏவப்பட்டதாக தெரியவருகிறது. (41)

## தென்மாகாண

கடத்தப்பட்டுள்ள நிலையில் அவைத் தலைவருக்கு வாக்களிக்கும் உரிமையும் இல்லாதிருப்பதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒருவாக்கு அதிகமாக உள்ளதாக சொல்லப்படுகிறது.

இதேவேளை புதிதாக நியமிக்கப்பட்ட ஆளுநர் நீதியாக நடந்து கொள்வார் என தாம் எதிர்பார்ப்பதாக மாகாணசபை முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்,

# நாதஸ்வர இசையுடனேயே அரச நிகழ்ச்சிகள் ஆரம்பம்

- முதல்வர் ஜெயலலிதா உத்தரவு

தமிழக அரசின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இனிமேல் நாதஸ்வர இசையுடனேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் தமிழிசை சங்கத்தின் 51-வது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். இவ்விழாவில் நாதஸ்வர வித்வான் ஷேக் சின்ன மௌலானாவிற்கு இசைப் பேரறிஞர் விருது முதல்வர் ஜெயலலிதாவினால் வழங்கப்பட்டது.

## தென் மாகாணத்தில்

எதிரணியைச் சேர்ந்த மாகாணசபை உறுப்பினர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளமையும் தெரிந்ததே

இந்நிலையிலேயே இன்று மாகாண சபையில் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளருக்கும், எதிர்க்கூட்டணியைச் சேர்ந்த ஆதரவாளர்களுக்கும் இடையில் வன்முறைகள்மூளலாம்எனச்செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே காலிநகரப் பகுதியில் பதற்றநிலை காணப்படுவதாகவும், நேற்றுக் கடைகள் மூடப்பட்டு சனநடமாட்டம் குறைந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நிவாரண

வலத்தில் வந்தவர்கள் கைகளில் சுலோகங்களை தாங்கி வந்தனர்.

இவ் ஊர்வலத்தின் இறுதியில் கட்டடத் தொழிலாளர் சங்கத்தின் சாவகச்சேரி கிளைச் செயலாளர் செ. சோமசுந்தரம் அவர்களால் மகஜர் ஒன்று வாசிக்கப்பட்டு சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (86)

## 31-ம்நாள் நினைவஞ்சலி



மலர்வு
02 07-1954

உதிர்வு
23-11-1993

### அமரர் தங்கராசா ஜெயக்குமார்

(பாதுகாப்பு உத்தியோகத்தர், இலங்கை வங்கி, பருத்தித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் கடமையாற்றி (பல வருடங்கள்) எங்கள் உள்ளங்களையெல்லாம் அன்பால் கவர்ந்து, எங்களை விட்டுப் பிரிந்து தாங்கொணாத் துயரில் ஆழ்த்தியுள்ள அமரர் ஜெயக்குமாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் அன்னாரின் பிரிவால் ஆழ்ந்த துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி

இலங்கை வங்கி, முகாமையாளரும்
பருத்தித்துறை. ஊழியர்களும்

(6966)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 02 — 09 — 1966



மறைவு: 23 — 11 — 1993

திருமதி
### இராமச்சந்திரன் ஜீவராணி

(அப்புகுட்டி) (அம்மன்)

எங்கள் அன்பு தெய்வமே அம்மா உங்கள் புன்னகை தவழும் இனியமுகம் எம் கண்களில் தெரிகிறதே எம்மை அன்புடனும் பாசத்துடனும் வளர்த்த தெய்வமே அம்மா எங்கள் இதயத்தில் என்றும் உங்கள் நினைவுகள் நீங்காது நிலைத்து நிற்கும்.

இன்று (23 - 12 - 1993) வியாழக்கிழமை அதிகாலை 6 - 00 மணிக்கு அந்தியேட்டியும், வீட்டுக் கிருத்தியமும் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தந்து, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

திருவில், பாசம் அன்பால் பரிதவிக்கும்
வல்வெட்டித்துறை. கணவன், பிள்ளைகள்.

(6987)

## புலமைப் பரிசில் பெறுபேறுகள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலிக் கொத்தணிக் குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற பெறுபேறுகள் பாடசாலை ரீதியாகக் கீழே தரப்படுகின்றன.

அத்தியார் இந்துக் கல்லூரியில் இரு மாணவர்கள், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில்பத்துமாணவர்கள், நீர்வேலி சி. சி. த. க. பாடசாலையில் ஆறு மாணவர்கள், நீர்வேலி றோ. க. த. க. பாடசாலையில் இரு மாணவர்கள், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஒரு மாணவர் சித்தியடைந்துளளனர்.

நீர்வேலிக்கொத்தணிக்குட்பட்ட பாடசாலைகள் அனைத்திலும் மொத்தம் இருபத்தியொருமாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

சாவகச்சேரிசந்திரபுரஸ்கந்தவரோதய ம.வி.யில் யோ. பிரசாந்தன் 158 புள்ளிகளையும் க.பிரசாத் 147புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர் இந்து ஆரம்ப பாடசாலையில் ரஞ்சன் கஜானனன் - 174 புள்ளிகளைப் பெற்றுபாடசாலையில் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

## வெள்ளிவிழா

வல்வெட்டித்துறை கணபதி படிப்பகத்தின் 25 ஆவது ஆண்டு விழாவும், பாலர் தினவிழாவும் இன்று வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு வல்வை மகளிர் மகா வித்தியாலயத்தில் படிப்பகத் தலைவர் திரு. இ. இராதாகிருஷ்ணன் தலைமையில் இடம்பெறும்

இந்நிகழ்வில் பாலர் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## கூட்டம்

சங்கானைக் கல்விக் கோட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்குமான கூட்டம் நாளை வெள்ளி பி. ப. 2. 00 மணிக்கு யாழ்-வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெறும் சகலரும் தவறாது சமுகமளிக்கும்படி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன்பணித்துள்ளார்.


நாங்கள் மெதுவாக
ஆனால்
## பலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்

ஜோ. எகட்டனின் ஜெசித்தாரா இன்று 3-வது அகவையைப் பூர்த்தி செய்கிறாள். அதாவது 3 வருடங்களை பூர்த்தி செய்கிறாள். இன்று 4-வது வருடத்தில் தனது சிறிய பாதங்களை ஊன்றி வைக்கிறாள். கடந்த 3 வருடங்கள் நெருக்கடியான காலப் பகுதியில் பலசோதனைகளுக்கு மத்தியில் தனது சேவையை மேற்கொண்டாள். அதற்கு மிக முக்கிய காரணம் எமது வாடிக்கையாளர்களாகிய நீங்கள்! இந்த காலப்பகுதியில் எமக்கு ஆதரவு நல்கிய உங்களுக்கு இறைவன் சார்பில் முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறாள். கடந்த காலங்களில் நாங்கள் ஏதும் தவறுவிட்டிருந்தால் அல்லது உங்களது மனம் கோண நடந்திருந்தால் அதற்கு மன்னிப்புக் கோருகின்றோம். தொடர்ந்து உங்களுக்கு சிறந்த சேவையை அளிக்க உங்கள் கருத்துக்களையும், முறையீடுகளையும் தக்க சான்றுடன் தயவு செய்து தெரிவியுங்கள். நாங்கள் மேலும் முன்னேற்றம் அடைவதற்கு அதுவே எங்களுக்கு ஊன்றுகோல்கள் நீங்களே! எங்கள் சிருஷ்டி கர்த்தாக்கள் அதற்கு இந்த நன்றிகள் பல. இந்த வேளையில் எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அன்பர்களுக்கு

கிறிஸ்து யேசுவின் பிறப்பாகிய
கிறிஸ்தோய நல்வாழ்த்துக்களை
சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றாள்

உரிமையாளர்: ஜோ. எகட்டன் ஊழியர்கள்

நாங்கள் உங்கள் உணவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம்

புதுயுகத்தில் புது உருவம்
## ஜெசித்தாரா

இன்று
எமது உணவகத்தில் கிறிஸ்மஸ் கரோல்ஸ் பாடல்கள் ஈழ நல்லூர் அருணாவின் இசையமைப்பில் பிரபல கிறிஸ்தவ பாடகர்களால் பாடப்படும். மாலை 5 00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பம் பிரவேசம் இலவசம் முற்றிலும் புதிய கோணத்தில்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி 8182) - செனித் அட்ஸ்


## 3-ம் வருட நினைவஞ்சலி

பிறப்பு: 25 — 12 — 75



இறப்பு: 23 — 12 — 90

### வீரவேங்கை மித்திரன்

[செல்வநாதன் பெனடிற்குமார் (சண்முகம்)]

## 45-ம்நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

தாயின் மடியில்: 01 — 01 — 1976



தாயக மண்ணில்: 11 — 11 — 1993

### கடற்புலி 2-ம் லெப். விவேகன்

(பாலசுப்பிரமணியம் பாலசொரூபன்)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

22 - 12 - 93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11739

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்

இல்லை.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

40-2394, 26-7353, 26-2391, 27-5863, 27-4726
26-6775, 43-3854, 26-6029, 24-4457, 42-9220
24-2680, 27-4673, 28-0523, 26-5178, 24-4390

## வீரவேஙகை மித்திரன்


லவநாதன் பெனடிற்குமார்(சண்முகப்)]

றாண்டு சென்றாலும் முழுமதியாய்
மிளிர்கின்றாய்;
மண்ணைக் காக்க உன் இன்னுயிரை ஈந்தாய்
உமது பிரிவால் துயருறும்
திரு. திருமதி எ. செல்வநாதன்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்)

ப்புலம்,
ணக்கோட்டை.

(6971)

## ம் ஆண்டு நினைவஞ்சலி



### மரர் இராமசாமி மருதையா

(அஜினா கிறைண்டிங் மில் உரிமையாளர்)

பின் மடியில் 7-08-1943 | தாயக மண்ணில் 03.01.1993

திதி : 23-12-1993

சமிகு தந்தையே பண்புமிகு தெய்வமே
தியின் சிகரமே எம்மை மீளாத் துயரில் ஆழ்த்தி
ன் சென்று விண்ணில் இருந்து எமைக் காக்கும்
ய்வமே ஆண்டுகள் ஒன்று என்ன ஈராயிரம் ஆண்
ள் சென்றாலும் உங்களை என்றும் மறவாத
பாசமிகு

வேலி தெற்கு,
வேலி.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

(6979)

## கடற்புலி 2-ம் லெப். விவேகன்

### (பாலசுப்பிரமணியம் பாலசொரூபன்)

எமது மகனின் வீரச்சாவு செய்தியை அறிந்து எமதில்லம் வந்து எம்துயரிற் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவர்க்கும், பல வகையிலும் உதவி புரிந்த அன்பர்களிற்கும், கண்ணீர் அஞ்சலி செலுத்திய யாழ் இந்துக் கல்லூரிச் சமூகத்தினர்க்கும், கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தினர்க்கும், கோப்பாய் அம்மன் கோவிலடி சனசமூக நிலையத்தினர்க்கும், மலர் மாலை சூட்டி, மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய அனைவர்க்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

25-12-1993 (சனிக்கிழமை) அன்று எமது இல்லத்தில் நடைபெறும் 45-ம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்-தனிப்பட்ட முறையிலே அழைக்க முடியாமைச்கு வருந்துகின்றோம்.

புதிய வரலாறு படைக்கவென பூநகரிச் சமரிற் காவியமான எமது செல்வன் 2-ம் லெப். விவேகனையும், ஏனைய வீரவேங்கைகளையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்

நன்றி

தந்தை: திரு. சண்முகம் பாலசுப்பிரமணியம்
தாய்: திருமதி பாக்கியம் பாலசுப்பிரமணியம்
சகோதரி: செல்வி தயாளரூபி பாலசுப்பிரமணியம்
ஆச்சி, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார்,
சகோதர, சகோதரிமார்.

வைத்தியசாலைக்கு அருகாமை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(6970)

திக்கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன்பணித்துள்ளார்.

## அதிபர்கள் கூட்டம்

வேலணைக்கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல அதிபர்களுக்குமான கூட்டம் ஒன்று நாளைவெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெறும். அனைத்துப்பாடசாலை அதிபர்களையும் புங்குடுதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் (யூனிவேர்சல் கல்வி நிலையம் கந்தர் மடம்) சமுகமளிக்குமாறு கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. நல்லையா அவர்கள் அறிவித்துள்ளார்.

## கலந்துரையாடல்

பலநோக்கு கூட்டுறவு சங்க தலைவர்கள் பொதுமுகாமையாளர் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யா.மா கூ சபைத் தலைவர் திரு. வை. செந்திநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

## 6-ம் ஆண்டு வீர அஞ்சலி

மலர்வு; 10-08-1958 | **மேஜர் முரளி** | வீரச்சாவு: 23-12-1987

தெளிவான நினைவோடும் திடமான மனதோடும்
தேசத்தை நீ நேசித்தாய் !
விழிபோலும் தமிழீழ மாணவர் வாழ்விலே – அண்ணனின்
நெறிகண்டு நீ வழிகாட்டினாய் !
ஒளிகண்டு தமிழீழம் உயர்வோடு மிளிர்ந்திட
உறுதியாய் உழைத்து நின்றாய்! - எங்கள்
மொழிவாழும் நாள் வரை முரளியே உன்பெயர்
முரசென ஒலித்து நிற்கும்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்."

விடுதலைப் புலிகள்
மாணவர் அமைப்பு

(சி-8191)

40-2394, 26-7353, 26-2391, 27-5863, 27-4726
26-6775, 43-3854, 26-6029, 24-4457, 42-9220
24-2680, 27-4673, 28-0523, 26-5178, 24-4390

## 5ஆம் ஆண்டு நினைவு



### கப்டன் அன்பு

(பத்தினாதர் அமலராஜன்)

தாயக மண்ணில் மலர்வு 03.05.1966 | அந்நியர் அழிப்பில் 23-12-1988

தாயக மண்ணின் விடிவை எண்ணி
அன்னை தந்தை சோதரரைப் பிரிந்தாய்
புலிகளின் அணியிலே இணைந்தாய்
மறத்தமிழ் வீரனாய் எழுந்தாய்
நெஞ்சினில் நெருப்பேந்தி நின்றவா!
காங்கேயனில் காவியம் படைத்தவா!
'அன்பு' என்று களங்கள் பல வென்றவா?
உன்னைச் சாவு வென்றதா?

சாதனை படைக்கப் புகுந்தாய்
மண்ணுக்கு உன்னையே கொடுத்திட்டாய்
ஐந்தாண்டு சென்றாலும் - உன்
அன்பு முகம் மறக்க முடியவில்லையே.

சின்னத்தோட்டம்
கடற்கரை வீதி,
பருத்தித்துறை.

தாய், சகோதரர்,
உறவினர், நண்பர்கள்.

(6995)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.